**சுருக்கம்**

கூட்டுறவுத் துறை – புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், 2021 – கூட்டுறவு நிறுவனங்கள் / சங்கங்களில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் பணியாளர்களின் குடும்பத்தினர்களுக்கு புதிய காப்பீட்டுத் திட்டத்தினை 21.08.2021 முதல் 20.08,2025 முடிய நான்கு ஆண்டுகளுக்கு நடைமுறைப்படுத்துதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

<u>கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (சிபி2) துறை</u>

அரசாணை (நிலை) எண்.112 நாள்: 02.12.2021

பிலவ ஆண்டு, கார்த்திகை–16

திருவள்ளுவர் ஆண்டு–2052

படிக்க:

1. அரசாணை (நிலை) எண்.243, நிதி (சம்பளம்) துறை, நாள் 29.06.2012.
2. அரசாணை (நிலை) எண்.142, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (சிபி2) துறை, நாள் 23.12.2014.
3. அரசாணை (நிலை) எண்.202, நிதி (சம்பளம்) துறை, நாள் 30.06.2016.
4. அரசாணை (நிலை) எண்.124, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (சிபி2) துறை, நாள் 18.08.2017.
5. அரசாணை (நிலை) எண்.160, நிதி (சம்பளம்) துறை, நாள் 29.06.2021.
6. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரிடமிருந்து வரப்பெற்ற கடிதம் எண் ந.க. எண் 35000/2021/ திகசுப2, நாள் 14.07.2021 மற்றும் 23.07.2021.

-------------

<u>ஆணை:</u>

பார்வை இரண்டில் காணும் அரசாணையில், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வந்த கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் சங்கங்களின் பணியாளர்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் மற்றும் விதிகளுக்குட்பட்டு முறையாக பணியமர்த்தம் செய்யப்பட்ட பொது விநியோகத் திட்ட விற்பனையாளர் மற்றும் கட்டுனர் உள்ளிட்ட பணியாளர்களுக்கும் தமிழ்நாடு அரசு ஊழியர்களுக்கு நடைமுறைப்படுத்தப்பட்டு

வந்த புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் நீட்டித்து ஆணையிடப்பட்டது. இதனடிப்படையில், காப்பீட்டுத்திட்டம் செயல்படுத்திட யுனைடெட் இந்தியா இன்ஷூரன்ஸ் நிறுவனத்துடன் 21.08.2015–இல் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரால் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு, இத்திட்டம் செயல்படத் தொடங்கும் நாளிலிருந்து இரண்டாண்டுகள் வரை நடைமுறையில் இருந்தது. இதன் மூலம் 2 ஆண்டுகளில் ரூ.2 இலட்சம் வரை மருத்துவ காப்பீடு வசதி பெறலாம் என ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு 20.08.2017 வரை திட்டம் செயல்படுத்தப்பட்டது.

2. பார்வை மூன்றில் காணும் அரசாணையில், அரசு ஊழியர்களுக்கு 01.07.2016 முதல் 30.06.2020 வரை மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் நீட்டிக்கப்பட்டது. இதனை தொடர்ந்து, பார்வை நான்கில் காணும் அரசாணையின்படி, புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் 2016, கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்களுக்கும் 21.08.2017 முதல் நான்காண்டுகளுக்கு ரூ.4.00 இலட்சம் வரை காப்பீடு அளித்து நீட்டிக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் 21.08.2017 முதல் 31.03.2021 வரை 5600 பணியாளர்கள் / குடும்பங்கள் ரூ.20.99 கோடி அளவிற்கு இழப்பீடு பெற்று பயனடைந்துள்ளனர் என்றும், இத்திட்டம் 20.08.2021 உடன் முடிவடைய உள்ளது என்றும், குறிப்பிட்டு அரசு ஊழியர்களுக்கு, புதிய மருத்துவக் காப்பீட்டுத்திட்டம், 2021–ன் மூலம் 01.07.2021 முதல் நான்காண்டுகளுக்கு செயல்படுத்திட அனுமதிக்கப்பட்டு அரசு ஊழியர்கள் நான்கு தொகுப்பு வருடங்களுக்கு ரூ.5.00 இலட்சம் வரையும், குறிப்பிட்ட சிகிச்சைகளுக்கு (Specified Illness) ரூ.10.00 இலட்சம் வரையும் காப்பீடு பெற பார்வை ஐந்தில் காணும் அரசாணையில் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் தனது கடிதத்தில், கூட்டுறவுச் சங்கங்களில் 2020–2021ம் ஆண்டு 31,899 பணியாளர்கள் இத்திட்டத்தில் சேர்ந்துள்ளனர் என்றும், ஒவ்வொரு ஆண்டும் புதிய பணியாளர்கள் சேர்க்கை மற்றும் ஓய்வு பெற்ற பணியாளர்கள் நீக்கம் ஆகியவற்றை பொறுத்து பணியாளர்களின் எண்ணிக்கை மாறுபடுமென்றும் தெரிவித்து அரசு பணியாளர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளவாறு மாதம் ரூ.300/- பணியாளர்களின் பங்களிப்பாகவும், மீதம் 50% பங்களிப்பு கூட்டுறவுச் சங்கங்களிலிருந்தும் வழங்கப்படுமெனவும் தெரிவித்துள்ளார். மேலும் ஓர் ஆண்டிற்கு தோராயமாக ரூ.11 கோடி செலவாகும் என்றும், இதனால் அரசுக்கு கூடுதல் செலவினம் ஏற்படாது எனவும் குறிப்பிட்டுள்ளார். பதிவாளர் மேலும் அரசுப் பணியாளர்களுக்கான புதிய மருத்துவ காப்பீட்டுத் திட்டம் 2021–ற்கு அனுமதிக்கப்பட்டுள்ளபடி யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி நிறுவனத்திடம் ஒப்பந்தம் மேற்கொள்ளப்படுமென்றும், அரசுப் பணியாளர்களுக்கான திட்டத்தில் உள்ள நிபந்தனைகளே இத்திட்டத்திற்கும் பொருந்தும் என தெரிவித்து அரசு ஊழியர்களுக்கு, புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் 2021–ஐ செயல்படுத்தியுள்ளது போன்று, கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கும் புதிய காப்பீட்டுத் திட்டத்தினை 21.08.2021 முதல் 20.08.2025 முடிய நான்கு ஆண்டுகளுக்கு நீட்டித்து உரிய ஆணை வழங்குமாறு அரசைக் கோரியுள்ளார்.

4. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கருத்துருவினை நன்கு பரிசீலித்து புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் 2021–ஐ 50 சதவிகித பணியாளர் பங்களிப்புடன் 21.08.2021 முதல் 20.08.2025 வரை நான்கு ஆணடுகளுக்கு கூட்டுறவு நிறுவனங்கள் / சங்கங்களில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் பணியாளர்களின் குடும்பத்தினர்களுக்கு செயல்படுத்த அரசு ஆணையிடுகிறது.

5. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.34454/ நிதி (மருத்துவக் காப்பீடு)/2021, நாள் 01.12.2021–ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

முகம்மது நசிமுத்தின்
அரசுகூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், சென்னை–10.
இயக்குநர், கருவூலங்கள் மற்றும் கணக்காயர்கள், சென்னை–15
யுனைடெட் இந்தியா இன்ஸ்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட், சென்னை –6.
முதன்மை மாநில கணக்கு துறை தலைவர்
(கணக்குகள் மற்றும் உரிமைத் தொகை), சென்னை–18.
மாநில கணக்கு துறை தலைவர் (தணிக்கை–I), சென்னை–18
மாநில கணக்கு துறை தலைவர் (தணிக்கை–II), சென்னை–18
மாநில கணக்கு துறை தலைவர் (உதபி), சென்னை–9 / மதுரை.
அனைத்து சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர்கள்
அனைத்து கருவூல அலுவலர்கள் / அனைத்து சார் கருவூல அலுவலர்கள்

<u>நகல்</u>
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலாளர், சென்னை–9.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
அரசு தலைமைச் செயலளரின் தனிச்செயலாளர், சென்னை–9.
கூடுதல் தலைமைச் செயலாளரின் முதன்மை தனிச் செயலாளர்,
கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, சென்னை–9.
மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதி (சம்பளம்/மருத்துவக் காப்பீடு) துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு/சுத்த நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

2/12/2021
பிரிவு அலுவலர்.

2.12.21